### மனித வளங்களை வளர்ப்பதில் – மகாராஷ்டிரம், குஜராத் மாநிலங்களைவிட தமிழ்நாடு மாபெரும் சாதனை!

# அதிக வேலை வாய்ப்புகளை வழங்குவதில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடம்!

## ‘திராவிட மாடல்’ அரசின் சாதனைகளை புள்ளி விவரங்களுடன் விளக்கும் ‘ரிசர்வ் வங்கி’ ஆய்வறிக்கை!

**சென்னை, ஜன.8–**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சி அதிக வேலை வாய்ப்புகளை வழங்குவதில் இந்தியாவில் முதலிடம் வகிக்கிறது என்றும் – மனித வளங்களை வளர்ப்பதில்** (Mandays) **மகாராஷ்டிரம், குஜராத் மாநிலங்களை விட தமிழ்நாடு மாபெரும் சாதனை படைத்துள்ளது என்றும் ரிசர்வ் வங்கியின் ஆய்வறிக்கை புள்ளி விபரங்களுடன் விளக்குகிறது.**

அதன் விபரம் வருமாறு :-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியில் பேரார்வம் கொண்டுள்ளார்கள். பெருந்தொழில்களைத் தொடங்கி இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கிடும் நோக்கில் தமிழ்நாட்டிலும், வெளிநாடுகளிலும் தொழில் முதலீடுகளை ஈர்த்துப் பல புதிய தொழிற்சாலைகளை உருவாக்கி வருகிறார்கள்.

அதே நேரத்தில் சிறுகுறு நடுத்தர தொழில்கள் அதிகளவில் தொடங்கிட ஊக்கமளிப்பதன் வாயிலாக சாதாரண மக்களும் அதிக வேலை வாய்ப்புகளைப் பெற்றுப் பயன்பெறுகின்றனர். இந்த வகையில் பொருளாதாரத்திலும் தொழில் வளர்ச்சியிலும் பல ஆண்டுகளாக முன்னிலையில் இருந்துவரும் குஜராத், மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களை விட தமிழ்நாடு சிறுகுறு நடுத்தர தொழில்கள் மூலம் அதிக வேலை வாய்ப்புகளை வழங்கி மாபெரும் சாதனைகளை நிகழ்த்தி வருகிறது.

இந்திய ரிசர்வ் வங்கியின் 2023-2024 ஆம் ஆண்டுக்கான வளர்ச்சி குறித்த ஆய்வேட்டில் இந்த விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. அதாவது தமிழ்நாட்டில் 39,699 சிறுகுறு தொழில்கள் உள்ளன. இவை 4,81,807 தொழிலாளிகளுக்கு வேலை வாய்ப்புகளை அளித்துள்ளது. இதன் மூலம் தமிழ்நாடு 8,42,720 மனித உழைப்பு நாள்களைக் (Mandays) கொண்டுள்ளது.

மகாராஷ்டிரா மாநிலத்தில் 26,446 தொழிற்சாலைகள் உள்ளன. 6,45,222 தொழிலாளிகள் உள்ளனர். இம்மாநிலம் 7,29,123 மனித உழைப்பு நாள்களைக் கொண்டுள்ளது. குஜராத் மாநிலத்தில் 31,031 தொழிற்சாலைகள் உள்ளன. 5,28,200 தொழிலாளிகள் உள்ளனர். இம்மாநிலம் 7,21,586 மனித உழைப்பு நாள்களைக் கொண்டுள்ளது. தொழிலாளர்களுக்கு அதிக வேலை வாய்ப்புகளை வழங்குதல் அதிகளவில் உற்பத்திகள் செய்தல் ஆகியவற்றில் மனித உழைப்பு நாள்களில் குஜராத் மகாராஷ்டிரம் மாநிலங்களை விட தமிழ்நாடு முன்னிலையில் உள்ளது என்பதை இந்த ஆய்வு தெரிவிக்கிறது.

கோவிட் 19 காலத்தில் கதவடைப்பு முதலிய இடர்ப்பாடுகளால் தொழில்களும் வேலை வாய்ப்புகளும் குறைந்த நிலையை இந்த திராவிட மாடல் அரசு பொறுப்பேற்றபின் தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு சீர்ப்படுத்தி வளர்ச்சியில் இன்று நல்ல முன்னேற்ற நிலையை அடைந்துள்ளது.

திராவிட மாடல் அரசு வேலை வாய்ப்புகளை அதிகரித்துள்ளதுடன் தொழிலாளர்களின் உற்பத்தித் திறனையும் அதிகரிக்கச் செய்து சிறந்த முறையில் வெற்றி கண்டுள்ளது. இந்தப் புள்ளி விவரங்கள் அடிப்படையில் தமிழ்நாடு 8,42,720 மனித உழைப்பு நாள்களைக் கொண்டு தொழிலாளர்களுக்கு அதிக வேலை வாய்ப்புகளை வழங்குவதில் இந்தியாவில் முதலிடம் பெற்றுள்ளது என்பதை இந்திய ரிசர்வ் வங்கியின் ஆய்வறிக்கை தெளிவுபடுத்தியுள்ளது.

தமிழ்நாடு ஒரு தொழிலாளிக்கு சராசரியாக 1.75 மனித உழைப்பு நாள்களை ஏற்படுத்தியுள்ளது. ஆனால் மகாராஷ்டிரம் ஒரு தொழிலாளிக்கு 1.13 மனித உழைப்பு நாள்களுக்கும், குஜராத் ஒரு தொழிலாளிக்கு 1.37 மனித உழைப்பு நாள்களுக்கும் மட்டுமே வேலை வாய்ப்புகளை அளிக்கின்றன. இந்தப் புள்ளி விவரங்கள் மற்ற இரண்டு மாநிலங்களை விட தமிழ்நாடு வேலை வாய்ப்புகளை அதிகரித்து உழைப்பாளிகளைத் தகுந்த முறையில் பயன்படுத்தியுள்ளது என்ற உண்மையைப் புலப்படுத்துகின்றன. அதேபோல பெரிய மாநிலங்களான உத்திரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம் ஆகிய மாநிலங்களிலும் மனித உழைப்பு நாள்கள், தொழிலாளிகள் இடையே பெரிய வேறுபாடு காணப்படுவதாகவும் இந்த ஆய்வு குறிப்பிடுகிறது.

---

### ஆர்.என்.ரவி ஒரு அக்மார்க் ஆர்.எஸ்.எஸ். தயாரிப்பு!

## ஆளுநர் பொறுப்பில் தொடர அவருக்கு அருகதை இல்லை!

### “தீக்கதிர்” தலையங்கத்தில் திட்டவட்டம்!

*சென்னை, ஜன.8-*

ஆளுநர் ஆர்.என்.ரவி ஒரு அக்மார்க் ஆர்.எஸ்.எஸ்.காரர் என்றும் ஆளுநர் பொறுப்பிற்கு தகுதியற்றவர் என்றும் இனி தமிழகத்தில் ஆளுநர் பொறுப்பில் நீடிக்க அருகதையற்றவர் என்று திட்டவட்டமாக “தீக்கதிர்” தலையங்கத்தில் தெரிவித்துள்ளது.

அதுவருமாறு:-

2025 ஆம் ஆண்டின் முதல் சட்டப் பேரவைக் கூட்டம் திங்களன்று துவங்கியுள்ளது. ஆண்டின் முதல் கூட்டம் ஆளுநர் உரையுடன் துவங்குவது வழக்கம். வழக்கம் போல ஆளுநர் உரையை படிக்காமல் ஆர்.என்.ரவி வெளிநடப்பு செய்திருக்கிறார். தேசிய கீதம் அவ மதிக்கப்பட்டு விட்டதாக பின்னர் ஆளுநர் மாளிகை விளக்கமளித்துள்ளது. அந்த விளக்க அறிக்கையில் கூட சமூக ஊடகத்தில் பதிவிடப் பட்ட பின்பு அவசரமாக நீக்கப்பட்டு சில திருத்தங்களுடன் மீண்டும் பதிவிடப்பட்டுள்ளது.


தீக்கதிர்
2025 ஜன.07 செவ்வாய்க்கிழமை
அடாவடி செய்வது தான் ஆளுநரின் வேலையா?
2025 ஆம் ஆண்டின் முதல் சட்டப் பேரவைக் கூட்டம் திங்களன்று துவங்கியுள்ளது. ஆண்டின் முதல் கூட்டம் ஆளுநர் உரையுடன் துவங்குவது வழக்கம். வழக்கம் போல ஆளுநர் உரையை படிக்காமல் ஆர்.என்.ரவி வெளிநடப்பு செய்திருக்கிறார். தேசிய கீதம் அவ மதிக்கப்பட்டு விட்டதாக பின்னர் ஆளுநர் மாளிகை விளக்கமளித்துள்ளது. அந்த விளக்க அறிக்கையில் கூட சமூக ஊடகத்தில் பதிவிடப் பட்ட பின்பு அவசரமாக நீக்கப்பட்டு சில திருத்தங்களுடன் மீண்டும் பதிவிடப்பட்டுள்ளது.
சட்டப் பேரவைக் கூட்டம் துவங்கும் போது நீராரும் கடலுடுத்த எனத் துவங்கும் தமிழ்த்தாய்

சட்டப் பேரவைக் கூட்டம் துவங்கும் போது நீராரும் கடலுடுத்த எனத் துவங்கும் தமிழ்த்தாய் வாழ்த்தும் அதன் பின் நம்முடைய நாட்டின் தேசிய கீதமான ஜன கன மன பாடலும் இசைக்கப் படுவது வழக்கம். இது குறித்து ஆளுநர் ஏற்கெனவே விளக்கம் கேட்டிருக்கிறார். தேசிய கீதத்தை முதலில் பாட வேண்டும் என ஆளுநர் கூற, அதற்கு மாநில அரசு தரப்பில் உரிய விளக்கமும் அளிக்கப்பட்டுள்ளது.

ஆனால் மாநில அரசின் சார்பில் தயாரிக்கப்பட்ட கொள்கை விளக்க குறிப்பை வாசிக்காமல் இருப்பதற்கு சாக்குத் தேடிய ஆளுநர், தேசிய கீதத்தை அவமதிப்பதாகக் கூறி அலறியடித்து வெளிநடப்பு செய்திருக்கிறார். இதன் மூலம் தமிழ்த்தாய் வாழ்த்தையும், தேசிய கீதத்தையும் அவர் ஒருசேர அவமதித்திருக்கிறார். ஏற்கெனவே ஒரு முறை தேசியகீதம் இசைக்கப்படுவ தற்கு முன்பே ஆர்.என்.ரவி அவசர கதியில் வெளியேறியது இங்கு நினைவு கூரத்தக்கது.

ஆர்.என்.ரவி ஒரு அக்மார்க் ஆர்எஸ்எஸ் தயாரிப்பு. ஆர்எஸ்எஸ் இயக்கம் கவியரசர் ரவீந்திரநாத் தாகூரின் ஜன கன மன பாடலையே ஏற்பதில்லை. ஆனால் ஏதோ தேசிய கீதத்தின் மீது அளவற்ற பற்று உள்ளவர் போல ஆர்.என்.ரவி காட்டிக் கொள்வது வெறும் நடிப்பே ஆகும்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன் றத்தையும், அதன் மரபுகளையும் மதிக்காதவ ராக ஆளுநர் ரவி செயல்படுகிறார். போட்டி அரசாங்கத்தை நடத்த முயல்கிறார். கடந்த ஆண்டுகளில் ஆளுநர் உரையின் சில பகுதிகளை படிக்க மறுத்தும், சில வற்றை சேர்த்துப் படித்தும் சர்ச்சையை உருவாக்கினார். பதவிக்காலம் முடிந்தபிறகும், அறிவிப்பின்றி ஆர்.என். ரவி தமிழ்நாட்டின் ஆளுநராக தொடர ஒன்றிய அரசு வகை செய்துள்ளது.

தமிழ்நாடு சட்டமன்றத்தையும், தமிழ் நாட்டையும் ஆளுநர் ஆர்.என்.ரவி அவமதிப்பது இது முதன் முறையல்ல. ஆளுநர் மாளிகையை ஆர்எஸ்எஸ் அலுவலகம் போல மாற்றி அன்றாடம் வம்பு வளர்ப்பதையும், மாநில அரசுக்கு எதி ராக கம்பு சுற்றுவதையும், திருவள்ளுவர், வள்ளலார் போன்ற வரலாற்று ஆளுமைகளுக்கு காவிச் சாயம் பூசுவதையுமே தன்னுடைய அரசியல் சட்டக் கடமைகளாக அவர் கருதுகிறார் போலும். இனியும் ஆளுநர் பொறுப்பில் தொடருவதற்கு ஆர்.என்.ரவிக்கு அருகதை இல்லை.

இவ்வாறு “தீக்கதிர்” திட்டவட்டமாக தனது கருத்தை தெரிவித்துள்ளது.

---

### புதுக்கோட்டை ஆலங்குடி பேரூர் கழகம் சார்பில்

## துணை முதல்வர் பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம்!

### அமைச்சர்கள் எஸ்.ரகுபதி – சிவ.வீ.மெய்யநாதன் – எழும்பூர் கோபி சிறப்புரை!

*புதுக்கோட்டை, ஜன. 8 -*

புதுக்கோட்டை தெற்கு மாவட்டம், ஆலங்குடி சட்டமன்ற தொகுதி ஆலங்குடி பேரூர் கழகம் சார்பில் கழக இளைஞரணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கி எளியோர் எழுச்சி நாள் மாபெரும் பொதுக் கூட்டம் 04.01.2025 - சனிக்கிழமை மாலை 5.00 மணியளவில் காந்தி பூங்கா (சந்தைபேட்டை), ஆலங்குடியில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளர், சட்டம் மற்றும் சிறைத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமையில் நடைபெற்றது.

பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ மெய்யநாதன் நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்புரையாற்றினார்.

ஆலங்குடி பேரூர் கழக செயலாளர் ஆ.பழனிக்குமார் அனைவரையும் வரவேற்றார். தலைமைக் கழக பேச்சாளர்கள் எழும்பூர் கோபி, ஆலங்குடி செல்வராஜ், இளம் பேச்சாளர்கள் உமாராணி பிரபு ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

நிகழ்வுகளில் மாவட்ட துணைச் செயலாளர்கள் ஞான.இளங்கோவன். ஸ்ரீதேவி அண்ணாதுரை மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

---

### கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவைச் செயலாளர்

## வண்ணை அரங்கநாதன் தாயார் திருமதி பட்டம்மாள் மறைவு!

### கழகத்தினர் அஞ்சலி!

*சென்னை, ஜன.8-*

கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை மாநிலச்செயலாளர் - தலைமைச் செயற்குழு உறுப்பினர் வண்ணை அரங்கநாதன் தாயார்திருமதிபட்டம்மாள் (வயது-96) அவர்கள் நேற்று முன்தினம் (6.1.2025) இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

மறைந்த பட்டம்மாள் அவர்களின் இறுதி ஊர்வலம் சென்னை பழவந்தாங்கல் அவரது இல்லத்தில் (சென்னை நங்கநல்லூர், பக்தவச்சலம் நகர் 15வது தெரு) இருந்து நேற்று புறப்பட்டு, பழவந் தாங்கலில் உள்ள ஈடு காட்டில் இறுதிச்சடங்குகள் நடைபெற்றன.

---

### மாவட்டச் செயலாளர் ஜெயபாலன் தலைமையில்

## தென்காசி தெற்கு மாவட்டத்தில் வர்த்தகர் அணி சார்பில் விளையாட்டுப் போட்டிகள்!

### வர்த்தகர் அணிச் செயலாளர் கவிஞர் காசிமுத்து மாணிக்கம் பரிசுகள் வழங்கினார்!

*தென்காசி, ஜன.8-*

தென்காசி தெற்கு மாவட்ட திமுக வர்த்தகர் அணி சார்பில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48 வது பிறந்தநாளை முன்னிட்டு மாவட்ட அளவிலான சதுரங்கப் போட்டி நடைபெற்றது உலக அளவில் சதுரங்க விளையாட்டை திரும்பி பார்க்க வைத்தவர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்தநாள் விழாவில் மாநில வர்த்தகர் அணி செயலாளர் கவிஞர் காசி முத்துமாணிக்கம் கலந்து கொண்டு சிறப்புரையாற்றும் போது குறிப்பிட்டார்.

தமிழக துணை முதல்வரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழாவை தி.மு.கவினர் அன்னதானம், ஏழை எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குவது, பள்ளி கல்லூரி மாணவ மாணவிகளுக்கு விளையாட்டு போட்டிகள் என பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றனர். அதன்படி தென்காசி தெற்கு மாவட்ட வர்த்தகர் அணி சார்பில் மாவட்ட அளவிலான சதுரங்க போட்டியை நடத்தினர்.

போட்டியை மாநில சுற்றுச் சுழல் அணி தலைவர் டாக்டர் பூங்கோதை ஆலடி அருணா அவர்களும் தென்காசி தெற்கு மாவட்ட செயலாளர் ஜெயபாலன் அவர்களும் தொடங்கி வைத்த நிலையில் மாலை பரிசளிப்பு விழா நடைபெற்றது.



விழாவிற்கு தெற்கு மாவட்ட தி.மு.க செயலாளர் ஜெயபாலன் தலைமை தாங்கினார்.

மாவட்ட வர்த்தக அணி தலைவர் மூப்பன் ஹபீப் ரகுமான், துணை தலைவர் பிலிப் ராஜா, துணை அமைப்பாளர்கள் சொ.சண்முகராஜ், இரா. செல்வ விநாயகம், பூ சுப்பையா பாண்டியன், ந.முத்தரசு, ஜே.அருணோதயம், பி.ராமராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் மா.முத்துக்குமார் அனைவரையும் வரவேற்று பேசினார்.

மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் எம். எஸ்.பி.கோட்டைச்சாமி நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார்.

விழாவில் சிறப்பு அழைப்பாளராக மாநில வர்த்தக அணி செயலாளர் கவிஞர் காசி முத்து மாணிக்கம் விழாவில் பேசும் போது,

மத்தியில் ஆளும் பா.ஜ.க. வினர் ஊழல் மற்றும் கொள்ளை அடிப்பதிலேயே கவனத்தை செலுத்துகின்றனர். விளையாட்டுத்துறையை பற்றி யோசிப்பதற்கு அவர்களுக்கு நேரமில்லை. ஆனால் இன்று சதுரங்க போட்டியை உலக அளவில் திரும்பி பார்க்க வைத்தவர் தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின். 18 வயதான இளம் மாணவர் குகேஸ் தான் வெற்றி பெற்றதற்கு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தான் என தெரிவித்தது இந்தியாவிற்கே பெருமை என்று பேசினார்.

அதனை தொடர்ந்து போட்டியில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு ரூபாய் 50,000 மதிப்பிலான பரிசுகள் வழங்கி பாராட்டினர்.

இவ்விழாவில், மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் எஸ்.முத்துச்செல்வி, தலைமைச் செயற்குழு உறுப்பினரும் முன்னாள் வடக்கு மாவட்ட செயலாளருமான டாக்டர் மா. செல்லதுரை, மாவட்ட துணைச் செயலாளர்கள் தமிழ்ச்செல்வன் கனிமொழி, கென்னடி, மாநில விவசாய அணி செயலாளர்கள் எஸ்.அப்துல் காதர், கு.செல்லப்பா தலைமைச் செயற்குழு உறுப்பினர் பு.ஆறுமுகச்சாமி, தலைமை பொதுக் குழு உறுப்பினர்கள் ரவிச்சந்திரன், க.சமுத்திர பாண்டியன் சாமிதுரை, ஒன்றிய செயலாளர்கள் எம்.பி.எம்.அன்பழகன், ஏ.ஆர்.எம்.அழகு சுந்தரம், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் டி.ஆர்.கிருஷ்ணராஜா, மருத்துவர் அணி தலைவர் டாக்டர் மாரிமுத்து, சுரண்டை நகர பொறுப்பாளர் ஆ.கணேசன், மீனவர் அணி அமைப்பாளர் ஐ. ஜேம்ஸ், விவசாயத் தொழிலாளர் அணி அமைப்பாளர் வே. கோமதிநாயகம்,

தகவல் தொழில் நுட்ப அணி அழகு தமிழ் சங்கர், இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஐவேந்திரன், தினேஷ், எம்.சிவகுமார், முகமது அப்துல் ரஹீம், டி. கே.ராஜ், மாவட்ட ஆதிதிராவிடர் நல குழு தலைவர் எம். சங்கர நயினார், விவசாய அணி பஞ்சு அருணாச்சலம், விவசாய அணி வெள்ளத்துரை பாண்டியன், அயலக அணி முத்து, சுப்பிரமணியன், ராமராஜ், மாவட்ட பிரதிநிதி பொன் செல்வன், ஆரியங்காவூர் வைகுண்டராஜா, வெண்ணியூர் ராமர், சிவ நாடனூர் சமுத்திர பாண்டியன், குறும்பலாபேரி உதயசூரியன், சுரண்டை பூல் பாண்டியன், என்.எஸ்.சுப்பிரமணியன், பி.பரமசிவன், ஏ.அஜய், மகளிர் அணி சுசிலா ரவீந்திரன், சபர் நிஷா, கே.ஏ.எஸ்.சாந்தி, சிவ.சண்முக ஞானலட்சுமி, பூங்கோதை பூபதி, ரேவதி பந்தல் ஆறுமுகச்சாமி பாண்டியன், சபீனா எம்.சங்கரேஸ்வரன், ஏ. பவுன்ராஜ், ஜோதிடர் மோகன், தங்க இசக்கி, பிரம்மா, மாரியப்பன், ஆர். சங்கர பாண்டியன், கீழச் சுரண்டை தர்மராஜ், அஸ்வின் உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

முடிவில் சுரண்டை நகர வர்த்தக அணி அமைப்பாளர் எஸ்.டி.மாரியப்பன் நன்றி கூறினார்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### டி. இராசரத்தினம்
### சனவரி 8 (1993)



செங்கற்பட்டு மாவட்டக் கழக அவைத் தலைவராகவும், தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் தொடர்ந்து பூவிருந்தவல்லி தொகுதி சட்டமன்ற உறுப்பினராக நான்குமுறையும் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பணியாற்றியவர்.

பூவிருந்தவல்லி ஒன்றிய பெருந்தலைவர், பூவிருந்தவல்லி பேரூராட்சித் தலைவர் உள்ளிட்ட பொறுப்புகளை ஏற்றுப் பணியாற்றியவர்.

விலைவாசி உள்ளிட்ட கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றுள்ளார்.

நெருக்கடிநிலை காலத்தில் மிசா சட்டத்தின்படி ஓராண்டு சிறை தண்டனை அனுபவித்தவர்.

“தோடிக்கு ஒரு இராசரத்தினம், தொகுதிக்கு ஒரு இராசரத்தினம்” என தலைவர் கலைஞர் அவர்களால் புகழப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**